# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசரியா, நேசபாய்- சென்னை, வில்சன் மேரி,ரூபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, எதெல்பெர்கா- திருச்சி,ஜெயசேகரி - கொடைக்கானல், ஜெரின் மேரி, மிரியம், ஸ்டெல்லா ரோஸ்- திண்டுக்கல், லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், ஜான்சி மேரி, இரஞ்சிதம், விமல் மேரி, லில்லி இஸபெல்லா மேரி, குளோரி சிறுமலர் - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், அர்மெல்லா - கன்னியாகுமரி, புஷ்ப மேரி - சிவகங்கை, பிரேமா, சிரோன், தெரஸிட்டா - நெல்லை, வித்யா மேரி, மரிய சூசை ரூபி- தூத்துக்குடி, சகாயம் - கடலூர், சலேத் மேரி -திருப்பூர் லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, அனன்சியா மேரி, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம். .

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா,ஜேடன், ஆனி பீட்டர் ராஜ், ஜான் ஜோசப், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா,மேரி மார்கிரேட், நான்சி பியூலா, செலின் மேரி, பாத்திமா, கிளாரா லூர்துமேரி, ஜெகரட்சகன் ஜோசப் - திருச்சி; புஷ்பக்கண்ணு, மிக்கேல் சாமி - கோயமுத்தூர், சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், கனிஷியஸ் விஷால், நிர்மலா யூஜின், வியாகுல மேரி ஜெபமாலை -சென்னை, மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி, ஜோஸ்பின் மேரி, *இருதய விஜில்லா* - திண்டுக்கல், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மரிய பிரகாசம் - தர்மபுரி, ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், தென்னரசு - தூத்துக்குடி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. வில்சன் மேரி - திருச்சி**
**திருமதி. புஷ்பக்கண்ணு - கோயமுத்தூர்**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# உதவும் கரங்கள்


## பதிப்பாசிரியர் பக்கம்

அருட்பணி. ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச


அன்னை மரியின் பக்தர்களே, ஆகட்டும் இதழின் ஆசிரியர்களே, இன்று நாம் வாழக்கூடிய உலகத்தில் உதவுகின்ற மனம் படைத்த மனிதர்கள் வெகுசிலர்தான். இன்றைய அவசர உலகத்தில் மனிதர்கள் அனைவரும் தங்கள் கனவுகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தங்களுடன் வாழும் சக மனிதர்களை, சக மனிதர்களின் சூழ்நிலைகளையோ திரும்பிப் பார்ப்பதற்கு அவர்களுக்கு நேரம் இருப்பது கிடையாது. ஆனாலும் அத்தி பூத்தாற்போல் இங்கொன்றும் அங்கொன்றுமாக மனிதர்கள் உதவி செய்கின்றவர்களாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இந்த உதவி செய்கின்ற மனம் நம் அன்னை மரியாவுக்கு சிறுவயது முதலே இருந்தது. அதனால்தான் தன்னுடைய வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் உதவி செய்கின்ற கரங்களுக்கு சொந்தக்காரராக இருக்கின்றார். இவரின் வாழ்க்கையில் உதவி என்பது எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்றால் என்று கபிரியேல் தூதரின் வார்த்தைக்கு ஆம் என்று உரைத்தாரோ அன்று கடவுளின் மீட்புத்திட்டத்தில் அவர் பங்கு பெறுகின்றார் அதே நேரத்தில் கடவுளின் மிட்புத் திட்டத்திற்கு உதவியும் செய்கின்றார்.

அன்னை மரியாளின் உதவுகின்ற குணம் அதோடு மட்டும் நின்றுவிடவில்லை, தொடர்ந்து உதவுகின்றவராகதான் இருக்கின்றார். தன்னுடைய உறவினரான எலிசபெத் வயதான காலத்தில் கருவுற்றிருக்கின்றார் என்று கேள்விப்பட்டதும் அனைத்தையும் விட்டு விட்டு அவருக்கு சென்று உதவ வேண்டும் என்பதில் அன்னை மரியாள்



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| மூவொரு இறைவனின் உறைவிடமாக மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| ஏவா, மரிய - ஒப்பீடு | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

கருத்தாயிருக்கின்றார். இத்தனைக்கும் தனக்கு முன்னால் ஒரு மிகப் பெரிய சவால் இருக்கின்றது. அந்த சவால் என்னவென்றால் அன்னை மரியாளின் உறவினரான எலிசபெத்தின் உறைவிடம்தான். எலிசபெத் ஒரு மலைநாட்டில் வாழ்ந்து வருகின்றார். அந்த இடத்திற்கு செல்ல போதுமான பாதைகள் கிடையாது. நடைபயணமாகதான் அங்கு செல்ல வேண்டும். போகின்ற பாதைகளில் போதுமான பாதுகாப்பு கிடையாது. இருந்தும் அத்தனை சவால்களைத் தாண்டி அன்னை மரியாள் அங்கு செல்கின்றார். சென்றவர் அங்கு தங்கி அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்கின்றார்.

அன்னை மரியாளின் உதவுகின்ற குணம் அதோடு மட்டும் முடியவில்லை. தொடர்ந்து உதவுகின்றவராகதான் இருக்கின்றார். கானாவூர் திருமணத்தில் அவரின் பங்கு அசாத்தியமானது. பொதுவாக திருமண நிகழ்விற்கு செல்கின்றவர்கள், திருமண தம்பதியர்களை வாழ்த்துவார்கள், வாழ்த்திவிட்டு திருமண விருந்தில் பங்கு பெறுவார்கள். திருமண வீட்டாரின் தேவைகள் என்ன அவர்களுக்கு நம்மால் என்ன உதவி செய்ய முடியும் என்று யாரும் நினைப்பது கிடையாது. ஆனால் நம் அன்னை அவ்வாறு கிடையாது. திருமண வீட்டார் ஏதோ ஒரு தேவையில் இருக்கிறார்கள் என்று தெரிந்திந்தவுடன் தன்னுடைய அத்தனை வேலைகளையும் விட்டு விட்டு திருமண வீட்டாருக்கு உதவ வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தன்னுடைய மகனான ஆண்டவர் இயேசுவிடம் சென்று இந்த திருமண வீட்டாருக்காக பரிந்து பேசுகின்றார். இவரின் பரிந்துரையைக் கேட்ட மகன் மட்டும் அதற்கு இல்லை என்று பதில் சொல்வாரா என்ன? அவரும் அங்கே தன்னுடைய முதல் அரும் அடையாளத்தை செய்து காட்டுகின்றார். அந்த திருமண வீட்டாருக்கு அன்னை அங்கே உதவியும் செய்கின்றார்.

இதோடு அன்னை மரியா தன்னுடைய உதவியை முடித்துக் கொள்ளவில்லை. தொடர்ந்து உதவி செய்கின்றவராகதான் இருக்கின்றார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய மக்கள் பணியை ஆரம்பித்த நேரம், பல இடங்களுக்கு சென்று போதிக்க ஆரம்பிக்கின்றார். பல்வேறு இன மக்களை அவர் சந்திக்கின்றார். பல்வேறு விதமான வார்த்தைகளையெல்லாம் மக்கள் அவருக்கு எதிராக பயன்படுத்துகின்றார்கள். இந்த வார்த்தைகள் அன்னை மரியாவின் காதுகளுக்கும் சென்றடைகிறது. ஏதாவது உதவியினை தன்னுடைய மகனுக்கு செய்ய வேண்டுமென்று முடிவு செய்துவிட்டு தன்னுடைய மகனை பார்க்க செல்கின்றார். இந்த இடத்திலும் உதவுகின்றவராக அன்னை இருக்கின்றார்.

அன்னை மரியாளின் உதவி இதோடு மட்டும் முடிந்துவிட்ட ஒன்று கிடையாது. தொடர்ந்து அன்னை மரியாள் உதவுகின்றவராகதான் இருக்கின்றார். கல்வாரிப் பாதையில் தன் மகனை சந்தித்தபோது அவருக்கு தன்னால் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று நினைத்த நேரமாக இருக்கட்டும், சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் மகனின் சிலுவை அடியில் நின்றபோது மகனுக்கு தன்னால் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று நினைக்கின்றவவராகதான் இருக்கின்றார். அவர் செய்த உதவிகளின் முத்தாய்ப்பு எதுவென்றால் அவர் சிதறிப்போன இயேசுவின் சீடர்களை ஒன்றிணைத்ததுதான். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அன்னை மரியாள் உதவுகின்ற கரங்களுக்கு சொந்தக்காரராக வாழ்ந்திருக்கின்றார்கள். அதனால்தான் திருஅவை அன்னையை இடைவிடா சகாயமாதா என்றழைக்கிறது.

**உதவும் கரங்கள் உதயமாகட்டும்**
**உறவுகள் அனைத்தும் உன்னதமாகட்டும்**





**விஜய பாரதி – பெங்களூர்**

2023–ம் ஆண்டு ஜீன் மாதம் எனக்கு திருமணம் ஆனது. அடுத்த மாதமே கருவுற்றேன். 42 நாட்களுக்குப் பிறகு மருத்துவமனையில் பரிசோதித்தோம் ஏனென்றால் எனக்கு இரத்தபோக்கு இருந்தது. அப்பொழுதுதான் எனக்கு தைராய்டு பிரச்சனை இருப்பதே தெரியவந்தது. நானும் என் கணவரும் கெபியில் வந்து அழுது ஜெபித்தோம். மறுபடியும் 2024-ம் ஆண்டு கருவுற்றேன் அதேபோல் 42 நாட்களுக்கு பிறகு இரத்தபோக்கு ஏற்பட்டது. நான் அன்னையிடம் அழுது ஜெபித்தேன். ஒன்பதாம் மாதத்தில் குழந்தையின் கழுத்தில் தொப்புள் கொடி சுற்றி விட்டது. பிப்ரவரி 12-ம் தேதி எங்களுக்கு ஒரு அழகிய குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**எரோமிக்கா – தண்டையார்பேட்டை**

இந்த ஆலயத்திற்கு நான் 2023-ம் ஆண்டு எனக்கு குழந்தை வேண்டும் என்று வந்தேன். இப்பொழுது எனக்கு 2023-ம் ஆண்டில் ஒரு ஆண் குழந்தையும், 2025-ம் ஆண்டில் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

மே மாதம் 3 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**மேரி - சோழிங்கநல்லூர்**

என் மகனுக்கு சில வருடங்களாக வேலை இல்லாமல் இருந்தது, அதற்காக நான் அன்னை மரியாவிடம் வந்து ஜெபித்தேன். இப்பொழுது என் மகனுக்கு ஒரு நல்ல வேலையைக் கொடுத்துள்ளார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ராணி – சோழிங்கநல்லூர்**

எனக்கு கடந்த ஒன்றரை வருடங்களாக ஒரு நிலத்தை விற்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தோம், நிறைய தடங்கல்கள் வந்து, அந்த நிலத்தை விற்க முடியாமலே போய்விட்டது. கடந்த மாதம் தியானம் நடந்தபோது இங்கு வந்து ஜெபித்தேன். இப்பொழுது அந்த இடத்தை நல்ல விலைக்கு விற்று உள்ளோம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**விஜய பாரதி – சென்னை**

நான் கடந்த 2013-ம் ஆண்டிலிருந்து 10 வருடங்களாக எனக்கு நிரந்தர வேலை இல்லாமல் இருந்தது. நான் குழந்தை இயேசு ஆலயத்திற்கு வந்து ஜெபித்து மாதாவின் கெபியில் புத்தகத்தில் எனக்கு நிரந்தர வேலை வேண்டும் என்று எழுதி வைத்து சென்றேன். இப்பொழுது எனக்கு நிரந்தரமாக ஒரு வேலை கிடைத்து விட்டது. ஒன்றரை ஆண்டுகளாக அந்த வேலையில் நல்ல சம்பளமும் கிடைக்கிறது. வெளிநாடுகளுக்கும் சென்று வருகிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



பேரறிஞர் ஜார்ஜ் பெர்னாட்ஷா தனது முதுமைக் காலத்தில் ஒருநாள் மிகவும் நெஞ்சு வலியால் அவதிப்பட்டபோது தன்னுடைய மருத்துவருக்கு போன் செய்து நெஞ்சு வலி அதிகமாக இருக்கிறது உடனடியாக என் வீட்டிற்கு வாருங்கள் என்று அழைத்தார். அதற்கு மருத்துவர் இங்கு மருத்துவமனையில் நிறைய நோயாளிகள் காத்திருக்கின்றனர் என்னால் வர முடியாது, ஆகவே நீங்கள் வாருங்கள் என்று கூறினார். அதற்கு பெர்னாட்ஷா என்னால் எழுந்து நிற்க முடியவில்லை, நடக்க முடியவில்லை என்றார். உடனே மருத்துவர் வீட்டிற்கு வர சம்மதித்தார். மருத்துவர் ஒரு முதியவர், வேகமாக வந்தார். மாடியில் தங்கியிருந்த பெர்னாட்ஷாவை பார்க்க மாடிப்படி ஏறி வந்தார். மருத்துவருக்கு மூச்சு வாங்க நெஞ்சைப் பிடித்தப்படி சேரில் அமர்ந்து விட்டார். அதைப் பார்த்து பதறிப்போன பெர்னாட்ஷா எழுந்து அவரின் நெஞ்சை தடவி விட்டார். பிறகு சமையல் அறைக்கு சென்று சூடாக காபி போட்டு கொடுத்தார். மருத்துவர் காபி குடித்துக் கொண்டே 1000 ரூபாய் பில் எழுதி கொடுத்தார். சிரித்துக் கொண்டே பெர்னாட்ஷா மருத்துவம் பார்த்தது நான். நீங்கள் ஒன்றும் செய்யவில்லை என்றார். மருத்துவர் நான் பார்த்த வைத்தியத்திற்குதான் இந்த பில் என்றார். அது எப்படி என்றார் பெர்னாட்ஷா. உடனே மருத்துவர் போனில் என்னவெல்லாம் கூறினீர்கள், எழுந்து நிற்க முடியவில்லை, நடக்க முடியவில்லை என்று சொன்னீர்கள். ஆனால் இப்போது எழுந்து நிற்கிறீர்கள், நடக்கிறீர்கள் எனக்கு காபி போட்டுக் கொடுத்தீர்கள். உங்களுடைய கஷ்டத்தை முதலில் பார்த்தீர்கள், அவை பெரிதாக தெரிந்தன. இப்போது எனது துன்பத்தை பார்த்ததால் உங்கள் துன்பம் மறைந்து விட்டது என்றார்.

துன்பம் மனித வாழ்வில் ஒரு அங்கம். தனது துன்பத்தைப்போல் மற்றவர் துன்பத்தையும் கருதும் உயர் பண்பு வாய்த்துவிட்டால் உலக மக்களுக்கு துன்பமில்லை என்பது வள்ளுவர் வாக்கு. மரியாள் நிகரில்லா துன்பங்களை எதிர்கொண்டார். சிலுவையின் அடியில் மரியாள் நின்று கொண்டிருந்தார் (யோவான் 19:25) அடிமைத்தளையிலிருந்த மானிடகுலம் மீட்பு பெற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்ததால் தனது துன்பங்களை இன்பங்களாக மாற்றினார். அன்னையைப் போல் ஏழை எளியோர் நல்வாழ்வு பெற எத்தகைய துன்பத்தையும் தாங்கிக் கொள்ள முன்வருவோம். அமைதியான உலகம் படைத்திடுவோம்.

# மூவொரு இறைவனின் உறைவிடமாக இருந்த மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

இவ்வாண்டு ஜூன் மாதத்தில் சிறிய, பெரிய விழாக்கள், நினைவு நாள் என்று இடம் பெறுகின்றன. இயேசுவின் விண்ணேற்றம், பெந்தக்கோஸ்து பெருவிழா, தூய தமதிருத்துவம், நற்கருணை, இயேசுவின் திருஇதயம், மரியாவின் மாசற்ற இதயம், மரியா திருஅவையின் அன்னை என்று இம்மாதத்தை திருவிழா மாதம் என்று அழைக்கலாம். இக்கட்டுரையில் மரியாவை தூய தமதிருத்துவதோடு இணைத்துப் பார்ப்போம். மரியா இறைவனின் அன்பு மகளாக, இயேசுவின் அன்னையாக, தூய ஆவியாரின் பத்தினியாக வாழ்ந்து தூய தமதிருத்துவதோடு நெருங்கிய தொடர்பு உடையவராக இருந்தார். மூவொரு இறைவனின் தெய்வீகப் பண்புகளை தம் வாழ்வில் உணர்ந்தார். இத்தகைய அன்னையை நாம் தனியாகவும் குழுமமாகவும் தியானித்து அவரை முன்மாதிரியாகக் கொள்ளும்போது இறைவனும் மகிழ்கின்றார். மரியாவைப் பார்த்து, 'நீயே எனது அன்பு மகள்'' என்று கூறுவது போல நம்மையும் பார்த்து அன்பொழுக அழைக்கின்றார். அதற்குத் தகுதியானவர்களாக நாம் மாற இக்கட்டுரையின் சிந்தனைகள் நமக்கு உதவட்டும்.

**மூவொரு இறைவனின் உறைவிடம்**

யோவான் நற்செய்தியில் இடம்பெறும் பின்வரும் பகுதியை சற்று ஆழ்ந்து தியானிப்போம். 'என் மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார், என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்''. தந்தையும் மகனும் இருக்கும் இடத்தில் தூய ஆவியாரும் கூடவே பிரசன்னமாக இருப்பார். தூய தமதிருத்துவம் நம்மில் வாழ்வதற்கு நமக்குத் தேவை இறைவார்த்தை. இது இறைவனின் வாயினின்று வருகிறது. உயிருள்ளது ஆற்றல் மிக்கது. வானத்தினின்று பொழியும் பனியும் மழையும் இப்பூமியை பயனுள்ளதாக்குவது போல இறைவார்த்தையும் நம்மில் நினைத்ததைச் செய்யும் ஆற்றல் மிக்கது. இந்த வாழ்வு தரும் வார்த்தை நம்மை மூவொரு இறைவனை அன்பு செய்ய அழைக்கின்றது. அந்த தூய தமதிருத்துவமும் நம்மில் குடியிருக்க வருகின்றார். இக்கருத்தை வலியுறுத்தும் பகுதியை திருவெளிப்பாடு நூலில் காண்கிறோம். 'நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாராவது என் குரலைக் கேட்டு கதவை திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்'' (3:20). நாம் இவ்வுண்மையை பல நேரங்களில் உணராமல் இருக்கிறோம். புனித பவுலடியார் மிக அழகாக இதை விவரிக்கிறார். 'கடவுளின் ஆவியால் இயக்கப்படுபவர்களே கடவுளின் மக்கள். எனவே அவரை நாம் அப்பா, தந்தையே என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும் போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார்'' (உரோ. 8:14-16). மேலும் கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதத்தில் இன்னும் ஆழமாகக் கூறும் பவுலடியாரின் கூற்று நம்மை இறைவனோடு நீக்கமற நிறைந்திருக்க அழைக்கின்றது. 'நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்து விடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது நீங்களே அக்கோவில்''. நமது இதயக்கதவைத் திறப்பதற்கு இறைவார்த்தை தான் உந்துதல் சக்தி அளிக்கிறது. இறைவார்த்தையின்படி வாழ்வோர் இறைவனுக்கு மிகவும் நெருக்கமாகின்றனர். ஏனெனில் அவர்கள் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றனர். மூவொரு





தெளிவுப்படுத்துகிறார். லூக் 1:28 –ல் காணப்படும் அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்ற இறைவார்த்தை அன்னை மரியா கேட்கிறார். நம்பிக்கையோடு கருத்தரிக்கிறார் என்று புனித அகஸ்டின் கூறுகிறார்.

**இறைவார்த்தையின் பின்னணி**

கூட்டத்திலிருந்த பெண் ஒருவர் சொன்ன வார்த்தைக்கும் ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தைக்கும் உள்ள பிணைப்பை புனித அகஸ்டின் பின்வருமாறு விளக்குகிறார். கூட்டத்திலிருந்த பெண் ஒருவர் அன்னை மரியாவை எல்லாரும் பார்க்கும் அந்த சாதாரண பார்வையில் பார்த்து மனித எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது அன்னையை அன்பொழுக கூர்ந்து பார்த்து தமது சிறப்பு பார்வையை பதியச் செய்து தமது அன்னையை இறைவார்த்தை கடைபிடிக்கும் சீடத்தியாக உயர்வுபடுத்துகிறார். எனவே இது தெய்வீகப் பார்வையாகும். லூக்கா 1:48 இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர் என்ற இறைவார்த்தையின் அடிப்படையில் லூக்கா 11:27-28 என்ற வார்த்தையிலும் பேறுபெற்றவர் என்றச் சொல் இடம் பெறுவதால் புனித அகஸ்டின் இப்பகுதியை அன்னை மரியாவுக்கென்று ஒரு பேறுபெற்றோர் பகுதியை லூக்கா நற்செய்தியாளர் உருவாக்கியிருக்கிறார் என்று புனித அகஸ்டின் கூறுகிறார்.

**தந்தையின் திருவுளம்**

மத்தேயு நற்செய்தியில் 12:46-50 பகுதியும் இந்த லூக்கா 11:27-28 பகுதியோடு தொடர்புடைய பகுதியாகும். இந்த இரண்டு இறைவார்த்தைகளையும் இணைக்கும் இணைப்புச் சொல்லாக தந்தையின் திருவுளம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மத்:12:50 விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார் என்று ஆண்டவர் இயேசு தருகின்ற உறுதிபடுத்தும் இறைவார்த்தையும் இறைவார்த்தையைக் கேட்டு அதை கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் என்ற பகுதியிலும் இறைவார்த்தைக்கு அதிகம் முக்கியத்துவம் தரப்படுவதாக புனித அகஸ்டின் உணர்கிறார். இந்த இரண்டு இறைவார்த்தைப் பகுதிகளையும் இணைக்கின்ற இணைப்புச் சொல் இறைவார்த்தை கடைபிடிக்கும் மக்களின் எண்ணமும் ஆகும். இங்கு திருஅவையின் சிந்தனையை புனித அகஸ்டின் இணைத்து தருகிறார். திருஅவை தன் மக்களை பெற்றெடுப்பதை உருவகப்படுத்துகிறார். இறைவார்த்தையைக் கடைபிடிக்கின்ற அனைத்து மக்களையும் தனது பிள்ளைகளாக திருஅவை கருதுகிறது. மத் 12:49 –ல் காண்கிறபடி தம் சீடர் பக்கம் நீட்டி என் தாயும் சகோதரர்களும் இவர்களே என்று ஆண்டவர் கூறுவதை புனித அகஸ்டின் மேற்கோள்காட்டி திருஅவையின் அனைத்து நம்பிக்கையாளர்களும் திருஅவையின் பிள்ளைகள் என்று உறுதியாக கூறுகிறார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

20



சென்ற மாத இதழில் கானாவூர் திருமணத்தில் பங்கேற்கும் அன்னை மரியாள் பேசிய வார்த்தைகளை மையமாக வைத்து சிந்தித்தோம். இந்த மாதக் கட்டுரையில் லூக்கா நற்செய்தி 11:27-28 காணப்படும் இறைவார்த்தையின் அடிப்படையில் புனித அகஸ்டின் கூறும் கருத்துகளைப் பற்றி சிந்திப்போம்.

**லூக்கா 11:27-28**

அவர் இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தபோது கூட்டத்திலிருந்த பெண் ஒருவர் உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர் என்று குரலெழுப்பி கூறினார். அவரோ இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் என்றார்.

இந்த இறைவார்த்தையின் அடிப்படையில் புனித அகஸ்டின் தரும் கருத்துக்கள் நம் அனைவரையும் சீர்தூக்கிப் பார்க்க அழைப்பு விடுப்பதாய் அமைந்துள்ளது. இந்த இரண்டு இறைவார்த்தைகளும் அன்னை மரியாவின் மகிமையைப் பற்றி புகழைப் பற்றிச் சொல்லக்கூடிய இறைவார்த்தைகள்.

**2. கூட்டத்திலிருந்த பெண் ஒருவர்**

இறைவார்த்தை 27-ன் அடிப்படையில் பார்க்கும்போது கூட்டத்திலிருந்த பெண் ஒருவர் யாராக இருக்கலாம் என்ற சிந்தனை எல்லோருக்கும் எழலாம். கூட்டத்திலிருந்து பேசியப் பெண் இவர்தான் என்று யாராலும் அறுதியிட்டு கூறமுடியாது ஏனென்றால் இறையியல் கருத்துகளைச் சொல்லும்போது இவராக இருக்கலாம்(அ) அவராக இருக்கலாம் என்றுதான் சொல்வார்கள். புனித அகஸ்டின் அவரின் கருத்துப்படி கூட்டத்தில் இருந்த அந்த பெண் லூக்கா 11:14-26 ஆகிய இறைவார்த்தையின் அடிப்படையில் வைத்து இயேசுவால் பேய் ஓட்டப்பட்டவரின் குடும்பத்தினராக இருக்கலாம் என்று கூறுகிறார். இயேசுவின் பெண் சீடர் குழுவின் பெண்களும் ஒருவராகவும் இருக்கலாம் என்றும் புனித அகஸ்டின் கூறுகிறார்.

**அன்னை மரியாவின் அன்புறவு**

அன்னை மரியாவின் கருத்தாங்கலைக் குறித்து ஏற்கனவே நாம் பார்த்துள்ளோம்.(அக்டோபர் 2024) அன்னை மரியா கிறிஸ்துவை தமது உடலில் கருத்தரிக்கும் முன் தமது உள்ளத்தில் நம்பிக்கையினால் கருதரித்தார். கூட்டத்திலிருந்த அந்த பெண் சொல்லும் உம்மை கருத்தாங்கி என்ற வார்த்தைக்கும் இறைவார்த்தையைக் கேட்டு என்ற வார்த்தைக்கும் தொடர்பு இருப்பதை புனித அகஸ்டின்





இறைவனும் நம்மில் வாசம் செய்ய வருகின்றார். இத்தகைய உண்மையை அன்னை மரியாவின் வாழ்வில் நாம் கண்டுணர்கிறோம்.

**விண்ணகத் தந்தையின் அன்பு மகள்**

மரியா விண்ணகத் தந்தையின் அன்பு மகள். இறைவன் அவரை அதிகமாகவே அன்பு செய்தார். தம் அருள் வரங்களால் நிறைத்திருந்தார். தமது மகனின் தாயாகவும் பொறுப்பினை நித்தியத்திலிருந்தே தன் நினைவில் கருக் கொண்டிருந்தார். அமல உற்பவியாகப் பிறக்கச் செய்தார். இறைமகனை சுமக்கும் பேழையாக மரியாவின் உதரத்தை உருவாக்கினார். பெண்களுள் ஆசி பெற்றவராக எல்லாத் தலைமுறையினரும் அவரைப் பேறுபெற்றவராகப் போற்றும் நிலையை அவருக்கு அருளினார். ஆயினும் மரியாவின் சுதந்திரத்தை மதித்தார். மீட்பின் வரலாற்றில் தனக்குரிய பங்கினை அளிக்க அழைப்பு விடுத்தார். வானதூதர் வழியாக அம்மகிழ்ச்சி செய்தியை அறிவித்து இறைவனின் அருளை அடைந்துள்ள மரியா, இயேசுவின் அன்னையாகும் இசைவைப் பெறுகின்றார். விண்ணகமும் மண்ணகமும் மரியாவில் சங்கமித்தன. அவரின் ‘ஆம்” என்ற அர்ப்பணிப்பினால் இறைவன் மகிழ்ந்தார். இம்மண்ணுலகமும் அகமகிழ்ந்தது. துன்பங்களும் வியாகுலங்களும் தொடர்ந்தாலும் இறைவனின் அன்பு மகளாகப் பயணித்தார். துன்பங்களின் கொடுமுடியில் கல்வாரியில் நின்றார். தொடக்கக் காலத் திருஅவைக்குத் தாயாகி தலைமை தாங்கினார். இறைவனும் அன்னையின் அருள் நிறை அர்ப்பண வாழ்விற்குப் பரிசாக அவருக்கு மகுடம் அணிவித்து மகிழவும் திருவுளம் கொண்டார். மரியா இறைவார்த்தை வழியாக இறைவனின் விருப்பத்தை அறிந்தார். அதை நிறைவேற்றுவதன் மூலம் இறைவனுக்குப் பிரியமுள்ளவரானார். திருச்சட்டங்களையெல்லாம் முழுமையாக நிறைவேற்றினார். இறைவனின் மகளாக மட்டுமல்ல, ஒரு அடிமையாகவே தன்னைக் கருதினார். நாமும் திருமுழுக்கினால் இறைவனின் அன்பு மக்கள் என்ற உரிமையைப் பெற்றோம். அவரை அப்பா தந்தாய் என்று அழைக்கும் தகுதியை அடைந்தோம். விண்ணகத் தந்தை நமது வாழ்வைக் கண்டு அகமகிழ்கின்றாரா? அன்னை மரியாவைப் போன்று நாமும் இறைவனுக்குப் பிரியமானவர்களாக வாழ, அவரின் கண்களில் பேறுபெற்றவர்களாக வாழ மரியாவை மாதிரியாகக் கொள்வோம்.

**இறைமகன் இயேசுவின் தாய்**

அன்னைமரி இயேசுவின் தாய். இந்த இயேசு இறைவனும் மனிதனும் ஆனவர். எனவே மரியா இறைவனின் அன்னையும் ஆகின்றார். இயேசுவாகிய மெசியா பிறப்பதற்கு இஸ்ரயேல் இனம் பல ஆண்டுகளாக காத்திருந்தது. ஒவ்வொரு யூதப் பெண்ணும் அவர் தன்னிடம் பிறக்கமாட்டாரா என்று இறைவேண்டல் புரிந்து வந்தார். இப்பாக்கியம் அன்னை மரியாவுக்குக் கிடைத்தது. கன்னி கருவுற்று மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவார் என்றும், காலம் நிறைவுற்றபோது இறைவன் தன் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார் என்றும் இறைவாக்குகள் முன்னறிவித்தன. இந்த மெசியா எளிமையானவராக, ஆனால் நீதியை வழங்குபவராக இருப்பார் என இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்டார். மிகவும் எளிமையானவராக, ஆனால் அருள்வரங்களால் நிரப்பப்பட்ட கன்னிமரியிடம் தனது மகன் பிறக்க இறைவன் திருவுளம் கொண்டார். கன்னிமரியின் உடலில் அவர் ஒரு பாகமானார். இறைவன் மனிதனாகும் இந்த மனித அவதார நிகழ்வில் மனுக்குலத்தின் சார்பாக அன்னை மரியா தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விதமாக மூவொரு இறைவனின் இரண்டாவது ஆளான இயேசுவிடமும் அன்னை மரியா நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருந்தார். அவரைத் தனது உதரத்தில் கருவுற்று அவருக்கு உருக் கொடுத்தார். அவர் ஞானத்திலும் அறிவிலும் வளர நாசரேத்து இல்லத்தில் அழகிய சூழலை உருவாக்கினார். இறைவனுக்கும் மனிதனுக்கும் பிரியமுள்ளவராக அவரை உருவாக்கிய பெருமை அன்னையைச் சாரும். இறையாட்சிப் பணிக்காக தனது மகனை மகிழ்வுடன் அனுப்பினார். அவருடன் உடன்பயணித்தார். அவருடைய பாடுகளில் பங்கேற்றார். இறுதியாக சிலுவையில் மீட்பின் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிய அன்பு மகன் விடுத்த அழைப்பினை ஏற்று, நம்மை தன்னுடைய அன்பு மக்களாக ஏற்றுக் கொண்டார். இவ்வாறு இயேசுவின் தாய் நம் அனைவரின் தாயும் ஆனார். அவரது தாயன்பை, பரிந்து பேசும் மனப்பான்மையை அவர் வதியும்

திருத்தலங்களில் நாமும் கிறிஸ்தவரல்லாதவர்களும் கண்டுணர்கிறோம். கானாவூரில் மணமக்களின் குறையைப் போக்க மகனிடம் விரைந்த மரியா தன்னை நாடி வருபவர்களின் தேவைகளை, விண்ணப்பங்களை நிறைவேற்ற எப்போதும் தனது அன்பு மகனிடம் விரைவாகப் பரிந்து பேசுகிறார். குறிப்பாக துன்புறுவோர் அருகில் வியாகுல அன்னையாக நின்று உயிர்ப்பின் ஆற்றலை உணர்த்தி வருகின்றார். அவர் நமக்குச் சொல்வதென்ன? என் மகன் சொல்வதெல்லாம் செய்யுங்கள். அவர் மகன் சொல்வது என்ன? நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும் என்ற அன்புக் கட்டளையை நிறைவேற்றுவோம். இறைவனுக்கும் மனிதருக்கும் நெருக்கமானவர்களாவோம்.

**தூய ஆவியாரின் பத்தினி**

தந்தைக்கும் மகனுக்கும் இடையே நிலவும் அன்பு உறவே தூய ஆவியார். இந்த தூய ஆவியாரால் கன்னி மரியா கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பார் என்று வானதூதர் மரியாவுக்கு மீட்பின் மங்களச் செய்தியை வழங்கினார். மூவொரு இறைவனின் பிரசன்னமும் செயல்பாடுகளும் இந்த கிறிஸ்து பிறப்புச் செய்தியில் வெளிப்படுவதை நாம் உணர்கிறோம். அந்த நேரம் முதல் மரியா ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டார். தூய ஆவியாரின் வல்லமையால் இறைமகனை தன் உதரத்தில் கருத்தாங்கினார். இறைவார்த்தையை தனது இதயத்திலும் இறைமகனை தனது திருவயிற்றிலும் சுமந்தார். முதல் நற்கருணைப் பேழை இவ்வுலகில் வலம் வந்தது. புதிய உடன்படிக்கையை சுமந்து சென்ற பேழை எலிசபெத்தைச் சந்தித்த போது இருவரும் தூய ஆவியாரில் அக்களிப்புற்று மகிழ்ந்தனர். இருவரின் குழந்தைகளும் ஆனந்தத்தில் மூழ்கினர். எலிசபெத்து ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு மரியாவை மெசியாவின் தாயாகக் கண்டு கொண்டார். பெண்களுள் பேறுபெற்றவராகப் போற்றினார். அவ்வீட்டில் மரியா ஆற்றிய அனைத்துப் பிறரன்புச் செயல்பாடுகளும் ஆவியாரின் தூண்டுதலால் நிகழ்ந்தன. தனது இறையாட்சிப் பணியைத் தொடங்குமுன் அப்பணிகளின் சுருக்கத்தை நாசரேத்தூர் தொழுகைக்கூடத்தில் இறைவாக்காக முழங்கினார். புதிய ஏற்பாட்டின் இறைவாக்கினர் இயேசு. அதை முன்னோட்டமாக தூய ஆவியாரின் ஆற்றலால் தனது விடுதலைக் கீதத்தில் முழங்கினார் மரியா. தூய ஆவியாரால் தூண்டப் பெற்று திருச்சட்டங்களையெல்லாம் நிறைவேற்றினார். தூய ஆவியாரின் அனைத்து வரங்களையும் கனிகளையும் நிறைவாகப் பெற்றிருந்தார். கானாவூரில் அரும் அடையாளத்தை நிறைவேற்றக் காலம் கனிந்துவிட்டதை தனது அன்பு மகனுக்கு உணர்த்தினார். வீரத்துடன் தனது மகனின் சிலுவைப் பயணத்தில் இணைந்தார். தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்ற இயேசுவின் இறுதிக் கையளிப்பிற்குச் சான்று பகர்ந்தார். இயேசுவின் உயிர்ப்பின் வல்லமையை உணர்ந்தார். அதன் பயனாக சிதறிக் கிடந்த சீடர்களையெல்லாம் ஒன்று சேர்த்து முதல் கூட்டியக்கத் திருஅவைக்குத் தலைமை தாங்கினார். நாசரேத்து ஊரில் தூய ஆவியாரின் வல்லமை அவர் மீது நிழலாடியது. பெந்தக்கோஸ்துப் பெருவிழாவில் தூய ஆவியாரை அக்கினி வடிவில் முழுமையாய்ப் பெற்றார். திருத்தூதுப்பணியில் தன்னை ஈடுபடுத்தினார். பெண் சீடர்களையும் ஒருங்கிணைத்தார். இறைவனின் அன்னையாக, ஆண்டவரின் தாயாக, தூய ஆவியாரின் ஆலயமாகத் திகழ்ந்த மரியாவை நாம் கண்டு பாவிப்போம். ஆவியார் நம்மை ஆட்கொள்ள, நம்மை ஆண்டு நடத்த அன்பினால் தூண்டப் பெற்று இவ்வுலகை இறையாட்சியாக மாற்றப் புறப்படுவோம்.

**நிறைவுரை**

அன்னை மரியாவுக்கும் மூவொரு இறைவனுக்கும் உள்ள நெருங்கியத் தொடர்பை இக்கட்டுரை வழியாக அறிகிறோம். நமது அன்னையைப் போன்று தூய தமதிருத்துவத்தோடு ஆழ்ந்த உறவை ஏற்படுத்திக் கொள்வோம். நமது திருமுழுக்கின் போதும் தூய ஆவியார் நம்மீது பொழியப்பட்டார். இயேசுவின் திருமுழுக்கின் போது அவர் பெற்ற அப்பா அனுபவத்தை நாமும் ஒவ்வொரு நாளும் உணர அவரை 'அப்பா தந்தையே'' என்று அழைக்கும் உரிமையை நமக்கு அளித்தார். 'அப்பா தந்தையே' என்று அழைக்கும் போது நாம் அனைவரும் ஒரே தந்தையின் மக்கள் என்பதை உணர வேண்டும். ஆனால் இன்று நமக்குள் எத்தனை பிளவுகள், பிணக்குகள், போட்டி மனப்பான்மை. மூவொரு இறைவனிடம் உள்ள இணைப்பு, ஒற்றுமை, பகிர்வு அனைத்தும் கிறிஸ்தவக் குடும்பங்களில் வாழப்பட வேண்டும். நாம் பெறும் அருள் அடையாளங்கள் மூவொரு இறைவனிடம் நம்மை இணைக்கின்றன. மூவொரு இறைவன் படைத்தல், மீட்டல், அர்ச்சித்தல் என்ற முப்பணிகளை ஆற்றி வருகிறார். இப்பணிகளில் நம்மையும் ஈடுபடுத்துகிறார். தொடக்கக்காலத் திருஅவையில் தூய ஆவியாரைப் பெற்ற கிறிஸ்தவர்கள் தமக்குரிய அனைத்தையும் பொதுவில் பகிர்ந்து கூட்டியக்கத் திருஅவைக்கு முன்னோடிகளாக இருந்தனர். நாமும் திருஅவை எதிர்பார்க்கின்ற நற்செய்தியின் தூதுவர்களாக வாழ ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு ஆகிய முப்பரிமாணங்களை நமதாக்குவோம்.





கடவுள் மருத்துவப் பெண்களுக்கு நன்மை செய்தார். இம் மருத்துவ பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் அவர் அவர்கள் குடும்பங்களை தழைக்கச் செய்தார். என் அன்புப் பிள்ளைகளே! கடவுளுக்கு அஞ்சி தீமையை விலக்கி நடப்பவர்களுக்கு, அவர் அவர்களின் குடும்பங்களை தழைக்கச் செய்தார்! என்னும் முதல் பாடத்தை கவனத்துடன் உங்கள் உள்ளங்களில் பதியச் செய்யுங்கள். அதை வாழ்வாக்க முயற்சி செய்யுங்கள்.

**அன்னையின் பாடத்தை நடைமுறை வாழ்வில் செயல்படுத்துதல்:**

உலகம் என்னும் பார்வோன் கத்தோலிக்கப் பெற்றோர்களிடம் கூறுவது என்ன வென்றால் உங்கள் குழந்தைகளை உலக காரியங்களில் வெற்றி பெற்றவர்களாக இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள். கடவுளுக்கு பிரியமானவர்களாக வாழ பின்னர் பார்த்துக் கொள்ளலாம். இதனால் நாமும் விதைக்க வேண்டிய காலங்களில் உலகப் பிரகாரமானவற்றை விதைத்து விட்டு, கனிதரும் காலங்களில் நல்லவற்றை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். ஆனால் கிடைப்பது ஏமாற்றமே! கடவுள் நமக்கு தந்த குழந்தைகளின் உள்ளங்களில் தீமையை விதைத்து விட்டு நன்மையை எதிர்பார்ப்பது முறையற்ற எதிர்பார்ப்பே! எனவே நாம் செய்ய வேண்டியது குழந்தைளுக்கு மறைக்கல்வி கற்றுக் கொடுப்பதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். நாள்தோறும் திருப்பலியில் பங்கெடுக்கச் செய்ய வேண்டும். குடும்ப செபமாலையில் பங்கெடுக்கச் செய்து, தனியாக செபமாலை செபிக்க கற்றுத்தர வேண்டும். குழந்தைகளின் உள்ளங்களில் அன்னை மரியாள் மீதான ஆழ்ந்த பக்தியை உருவாக்க வேண்டும். காவல் தூதரைப் பற்றிய அறிவை கொடுக்க வேண்டும். புனிதர்களின் வாழ்வை பற்றிய தெளிவை வழங்குதல் வேண்டும். நற்கருணையில் வீற்றிருக்கும் ஆண்டவரை நாள்தோறும் சந்திக்க ஊக்கப்படுத்த வேண்டும். அப்போது மருத்துவப் பெண்களின் குடும்பங்களை கடவுள் தழைக்கச் செய்தது போல நீங்களும் உங்கள் பிள்ளைகளும் கடவுளின் ஆசீரால் நிரப்பப்படுவீர்கள்.

**கடமை தவறுவதினால் ஏற்படும் விளைவுகள்**

மருத்துவ பெண்களிடம் எபிரேய ஆண்மகவை கொலை செய்ய கட்டளையிட்ட பார்வோனின் செயலுக்குரிய விளைவாக வி.ப.12:29 இல் எகிப்தியரின் எல்லா தலைப்பேறான ஆண் பிள்ளையையும் ஆண்டவர் சாகடித்தார் என்னும் நிகழ்வை காண முடிகிறது. கத்தோலிக்க பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு கடவுளைக் கொடுக்க வேண்டியது உங்கள் கடமை. கடவுள் இல்லாத உள்ளங்களில் வீடுகளில் அழிப்பவன் தங்கியிருப்பான். ஆனால் தினந்தோறும் குடும்பமாக கூடி செபமாலை செபித்தபிறகு இறை வார்த்தையை வாசித்து தினம் ஒரு வசனத்தை மனப்பாடமாக படிக்க வைத்து பயிற்சி வழங்கும் போது கிடைக்கின்ற கடவுளின் தனிப்பட்ட பாதுகாப்பையும் நாம் அனுபவத்தில் மட்டுமே உணர முடியும். எனவே அன்னையின் முதல் பாடத்தை கவனமுடன் கற்று கடவுளின் கருணையை பெற்றுக் கொள்வோம்.

மரியே! எங்கள் நல்ல ஆசிரியையே! வாழ்க!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 8

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

**அறிமுகம்:**

மாதா பிதா குரு தெய்வம் என்னும் ஆன்றோர் மொழிக்கேற்ப இவ்வுலகில் மனிதர்களாக பிறக்கும் ஒவ்வொருவரும் பிறந்த குழந்தையாக இருக்கும் போதே யாரும் சொல்லாமலேயே அம்மாவை அறிந்து கொள்கிறோம். அம்மாவின் மூலம் அப்பாவையும், அம்மா அப்பா மூலம் ஆசிரியரையும் அறிந்து கொள்கிறோம். இவர்கள் அனைவரின் வழியாக தெய்வத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். பரம தந்தையை நோக்கி தமக்கு கொடுக்கப்பட்ட குழந்தைகளை வழிநடத்துவதில் தாயும் தந்தையும் ஆசிரியர்களும் ஏதோ ஒருவிதத்தில் தோல்வியடைந்து விட்டார்கள் என்றே நாம் கூற வேண்டும். பெரும்பாலான கத்தோலிக்கப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உலக காரியங்களை கொடுப்பதில் வெற்றி பெற்றதாக கருதும் அதே நேரத்தில் ஆன்ம காரியங்களை கொடுப்பதில் எவ்வளவு தவறியிருக்கிறோம் என்பதை காலம் கடந்தே உணர்கின்றோம். காலம் கடந்து உணர்வதால் எவ்வித நன்மையும் இல்லை. எனவே கடவுளின் உரிமை சொத்தான கத்தோலிக்கப் பொதுநிலையினராகிய நாம் ஆசிரியருக்கெல்லாம் ஆசிரியராம் சேசுவுக்கு அமுதூட்டும் போதே அனைத்தையும் ஊட்டி வளர்த்த அன்னை மரியாவை நம் ஆசிரியையாக ஏற்றுக்கொண்டு அவர் கற்றுத்தரும் பாடங்களை நன்கு கற்றுக் கொண்டு பரமபிதாவுக்கு மிகவும் பிரியமுள்ள மகனாக மகளாக வாழ்ந்திட முயற்சிகள் மேற்கொள்வோம்.

**அன்னை கற்றுத் தரும் முதல் பாடம்:**

என் அன்பு மகனே! மகளே! இன்று நான் உனக்கு கற்றுத்தரும் முதல் பாடம் கடவுளுக்கு அஞ்சுதல் என்பதே! கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்களுக்கு கடவுள் எவ்வளவு நன்மை செய்கிறார் என்பதை சிப்ரா மற்றும் பூவா என்னும் மருத்துவ பெண்களுக்கு கடவுள் செய்ததை விடுதலைப் பயணம் 1:15-21 வாசித்து தியானியுங்கள். எகிப்திய மன்னன் பார்வோன் மருத்துவ பெண்களிடம், நீங்கள் எபிரேய பெண்களுக்கு பிள்ளைப் பேற்றின் போது நீங்கள் பணிபுரிகையில் ஆண் மகவு என்றால் அதைக் கொன்று விடுங்கள். ஆனால் அம்மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் ஆண் குழந்தைகளை வாழவிட்டார்கள். பார்வோன் இதனை அறிந்து கேள்வி கேட்கும் போது அம்மருத்துவ பெண்கள், நாங்கள் வருவதற்கு முன்பே எபிரேய பெண்களுக்கு பிள்ளைப்பேறு ஆகிவிடுகிறது என்று காரணம் கூறினர். இதன் பொருட்டு





# அன்னையின் 78 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## நலம் தரும் அன்னைத் திருத்தலம், சொலாரோலோ (Solarolo) எமிலியா ரொமாஞ்ஞா, இத்தாலி பாகம் - 11

கி.பி. 1736 ஆண்டு அன்னையின் திருஉருவம் சொலாரோலோ பங்கு ஆலயத்திலிருந்து, புதிதாக கட்டப்பட்ட ஆலயத்திற்கு பவனியாக கொண்டு செல்லப்பட்டது என்பதையும், அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் கடைசி ஞாயிறன்று இப்பவனியானது அன்னையின் திருத்தலத்தில் தொடங்கி சொலாரோலோ கிராமம் முழுவதும் சென்று மீண்டும் திருத்தலம் வந்தடைகிறது.

மழை, வெயில், பனி, போர், தொற்றுநோய், நிலநடுக்கம் என பல்வேறு இயற்கை பேரிடர்கள் மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு தடைகளுக்கிடையே இப்பவனியானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அன்னையின் திருஉருவம் செல்கிற வழியெல்லாம் இன்றுவரை நோய்களிலிருந்தும், இயற்கை சீற்றங்களிலிருந்தும் காப்பாற்றபட்டு வருகிறது என்பது எல்லோரையும் வியக்க வைக்கும் செய்தியாக உள்ளது.

இந்த திருத்தலம் அமைந்துள்ள சொலாரோலோ கிராமமானது செனியோ (Senio) மற்றும் சென்தெர்னோ (Senterno) நதிகளுக்கிடையில் அமைந்துள்ள சமவெளியல் உள்ளது. கி.பி. 2023ஆம் ஆண்டு மே மாதம் 16 -17 தேதிகளில் பெய்த பெருமழையாலும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும் இக்கிராமத்தின் 70% பகுதி பெருமளவு பாதிக்கப்பட்ட போதிலும் அன்னையின் திருஉருவம் பவனி செல்லும் வீதிகள் எந்தவித பாதிப்புக்குள்ளாகமல் இருந்ததாக சொல்லி வியக்கின்றனர் மக்கள். மேலும், கடந்த ஆண்டு செப்டம்பர் இறுதி

ஞாயிறன்று அன்னையின் திருஉருவம் பவனி ஆரம்பிப்பதற்கு முன் பெருமழைக்கான எச்சரிக்கை விடப்பட்டது. அன்னையின் திருஉருவத்தை பவனியாக எடுத்துச் செல்வதா வேண்டாமா என்ற கேள்வி எழுந்த போது, திருத்தலத்தின் பொறுப்பு அருட்பணியாளர். ஆன்னையிடம் வேண்டி பின் பவனி சென்றே ஆகவேண்டும், இத்தனை ஆண்டுகளாக தடையில்லாமல் செல்ல வழிவகுத்த இறைவன் இந்த ஆண்டும் உதவி செய்வார் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராக இறைமக்களின் தூண்டுதலால் பவனியை மேற்கொண்டார். அன்னையின் ஆடம்பர பவனி வழக்கமான பாதையில் சென்று திருத்தலத்தை வந்தடைந்த பிறகு, அரை மணிநேரம் கழிந்த பெருமழையும் அதனைத் தொடர்ந்து மற்றொரு வெள்ளப்பெருக்கையும் சொலோரோலோ சந்தித்ததாம். இங்ஙனம், இயற்கை சீற்றங்களிலிருந்து அன்னை இக்கிராமத்தை பாதுகாப்பது இது முதல் முறையல்ல.

கி.பி. 1748 மற்றும் கி.பி. 1796ஆம் ஆண்டுகளில் இப்பகுதி முழுவதிலும் பெருந்தொற்று ஒன்று ஏற்பட்டு ஆயிரக்கணக்கானவர்களை பாதித்ததோடு, நூற்றுக்கணக்கானவர்களின் இறப்புக்கும் காரணமாக அமைந்தன. இப்பெருந்தொற்று காலங்களில் இக்கிராம மக்கள் நலம் தரும் அன்னையின் பரிந்துரையை நாடினர். அன்னையும் தன் திருமகனிடம் பரிந்து பேசியதால் இக்கிராம மக்கள் காப்பற்றப்பட்டனர்.

கி.பி. 1796ல் நெப்போலியனின் பிரெஞ்ச் படைகள் எமிலியா பிரதேசத்தையும் ஆக்கிரமித்தன. அதில் சொலோரோலோவும் அடங்கும். இத்தாலி முழுவதிலும் ஆலயங்களை அரசு எடுத்துக் கொண்டது போல, இங்கும் ஆலயம் அரசுடைமையாக்கப்பட்டது. ஆலயத்தை பராமரித்த மங்கள வார்த்தை பக்தி இயக்கத்தினரிடமிருந்து, ஆலயமானது கி.பி. 1802ஆம் ஆண்டு நகரஅவையினரால் மற்றொரு குழுவிடம் ஒப்படைக்கபட்டது. நெப்போலியனின் ஆக்கிரமிப்பு காலம் முழுவதும் ஆலய திருவிழா கொண்டாட்டத்திற்கான செலவானது நகரஅவையாலும், புதிய பக்தி இயக்கத்தினராலும் வழங்கப்பட்டது. கி.பி. 1816ஆம் ஆண்டு திருத்தலத்திற்கான இரண்டு மணிக்கூண்டுகள் கட்டப்பட்டன. கி.பி. 1829ஆம் அன்னையின் பக்தி முயற்சிகள் தொடங்கப்பட்ட நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டன.

அந்நாட்களில், சொலோரோலோவிலிருந்து அன்னையின் திருத்தலத்தை வயல்களுக்கிடையேயான ஒற்றையடிப்பாதை வழியாக மட்டுமே அடையமுடியும். ஆன்னையின் திருத்தலத்தை அடைய ஒரு முறையான சாலை அமைக்கப்படவேண்டும் என்றும் மக்கள் தொடர்ந்து கிராமசபை





அழைப்பதற்குப் பதிலாக பெண்ணே என அழைக்கிறார். காரணம் மேற்குறிப்பிடப்பட்டதுதான்.

### விசுவாசத்தின் தாய்

யூதகுல மரபுப்படி ஆண்கள் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தனர். பெண்களுக்கு அப்படி இல்லை பெண்களுக்கும் யூத சமயத்தில் முக்கியத்துவம் கொடுத்திருப்பவர்களேயானால் ஆபிரகாம் விசுவாசததின் தந்தை என்று அழைக்கப்பட்டது போலும் மரியாவும் விசுவாசத்தின் தாய் என்று அழைக்கப்பட்டிருப்பார். ஏனெனில் அவருடைய செயல்கள் வெள்ளிடைமலையாய் அவரின் விசுவாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. ஆபிரகாம் கடவுளின் வார்த்தையை நம்பி தன் சொந்த ஊரையும் இனத்தையும் விட்டு விட்டு பயணம் செய்கிறார். தனக்குக் கடவுளால் கொடையாகத் தரப்பட்ட ஒரே மகனை பலியிடவும் துணிகிறார். இதை மரியாவின் வாழ்வில் ஒப்பிடும்போது உள்ள சிறப்பு என்னவெனில் கிறிஸ்து எனும் இரண்டாம் ஆளாகிய கடவுள் தன்னிலே உருவாகவும் இறுதியில் உலகுக்காக கையளிக்கவும் பலியாக்கவும் அழைக்கப்பட்டவர்தான் மரியா. தனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பை முழுமையாக விசுவாசத்தின் ஒளியில் கடவுளின் வார்த்தையை நம்பி செயல்பட்டவர். என்ன நேர்ந்தாலும் இறைவன் பார்த்துக் கொள்வார் என விசுவசித்தவர் அன்னை மரியா.

ஓவ்வொரு விசுவாசியும் கடவுளின் அருங்குறி அருள் அடையாளம் (பெய்லி) சுவாசம் உடலுக்கு உயிர் தருகிறது. விசுவாசம் ஆன்மாவிற்கு உயிர் தருகிறது. விசுவாசம் என்பது ஆன்மா மீட்டும் சுகமான இராகம். அந்த இராகமே நம் வாழ்வையும் பிறர் வாழ்வையும் இனிமையாகும்படி வாழ்ந்து மாதிரி தந்தவரே மரியா. வெற்றி பெற்ற மனிதர்கள் வித்தியாசமானதைச் செய்தவர்கள் அல்ல, வித்தியாசமாய் செய்தவர்கள் என்ற கூற்றை உண்மையாக்கினவர் மரியா. நம் அன்னை மரியா விசுவாசத்தில் வித்தியாசம் காட்டினார் என்பதே ஆகும். அவர் வித்தியாசமாய் வாழ்ந்தவர் அல்ல. மாறாக விசுவாசத்தில் வாழ்ந்தவர் எனலாம். எனவேதான் மரியாவை விசுவாசத்தின் தாய் அல்லது விசுவாசியாயிருக்கிற கன்னிகையே என அழைக்கிறோம்.

ஆமென். கடவுள் மனிதனாக பிறக்க உதவியது இதன்வழி அவர் விண்ணகத்தை மனிதனுக்கு திறக்கலானார் புனித அகுஸ்தினார்.

**விசுவாசிகளின் கன்னிகை மரியா- ஏன்?**

மரியா விசுவாசிகளின் முதன்மையானவள்
மரியா விசுவசிப்பவர்களின் பிரதிநிதி

**1.மரியா விசுவாசிகளின் முதன்மையானவள்**

மரியா விசுவாசிகளின் முதன்மையானவர் என்று சொல்லும்போது இவர் எண் வரிசையில் அல்ல. மாறாக தரத்தினைப் பற்றி கூறுகின்ற சிறப்பைப் பற்றி கூறுகிறது. ஒரு பணியை எத்தனை பேர் வேண்டுமென்றாலும் செய்யலாம். ஆனால் பணியின் தரம் அந்த நபரின் புகழுடன் பெயரையும், சிறப்பையும், உயர்வையும் நிர்ணயிக்கிறது இது போன்றதே மரியின் விசுவாசம் எத்தனையோபேர் கடவுளை விசுவசித்திருக்கலாம். ஆனால் முதன்மையாக நிற்பவர் நம் அன்னை மட்டும்தான், மரியா தன் வாழ்வை அவருடைய ஞானத்திலோ அறிவிலோ திறமையிலோ நிறுத்திச் செயல்படவில்லை. மாறாக அவருடைய விசுவாசத்தை செயல்களிலே வெளிப்படுத்திச் சிறப்பு பெற்றார். விசுவாசம்தான் மரியாவுக்கு விலாசம் தந்தது என்றாலும் அது மிகையல்ல. எத்தனையோ இன்னல்கள், இடையூறுகள், தடைகள் தடுமாற்றங்கள், குழப்பங்கள், குமறல்கள் ஆகிய தடைகளை இவர் சந்திக்க நேர்ந்தபோதும் கூட விசுவாசம் மட்டும் இவரை விட்டு சென்றுவிடாதபடி கவனமாக இருந்தவர் மரியா. எடுத்துக்காட்டாக கானாவூர் திருமண நிகழ்வு. திருமண நிகழ்ச்சியில் திராட்சை இரசம் தீர்ந்து போக மரியா இயேசுவிடம் வந்து அவரை செய்யும்படி பரிந்துரை செய்யும்போது, இயேசுவின் வார்த்தைகள் அம்மா எனது நேரம் இன்னும் வரவில்லை என்பது மரியாவுக்கு புரிந்து கொள்ள முடியாத குழப்பத்தையும் கலக்கத்தையும் உண்டாக்கியது. ஆயினும் இயேசுவின் மீது விசுவாசம் கொண்டவராக பணியாளர்களிடம் அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள் எனக் கூறியதை விவிலியத்தில் நாம் பார்க்கின்றோம்.

**2.மரியா விசுவாசிகளின் பிரதிநிதி**

யோவான் நற்செய்தியில் மரியாவைப் பற்றிய சிந்தனை நேரடியாக இல்லை. ஆனாலும் மறைமுகமாக அவரைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சிந்தனையில் ஒன்றுதான் மரியா விசுவாசிகளின் பிரதிநிதி என்பது இயேசு அம்மா என்று





நிர்வாகத்திடம் முறையிட்டு கொண்டேயிருந்தனர். ஆனால், சில நில உரிமையாளர்களின் எதிர்ப்பின் காரணமாக அக்கோரிக்கை நிறைவேற்றப்படமலேயே இருந்தது. கி.பி. 1849ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், உரோமை குடியரசு அமைக்கப்பட்டதாக செய்திகள் வெளியான உடன், ஒரு குழப்பமான சூழல் நிலவியது. அச்சூழலில் மக்கள் உடனடியாக அன்னையின் திருத்தலத்தை அடைய நல்ல பாதையை அமைத்தனர். இப்பணிகளானது கி.பி. 1854ஆம் ஆண்டு மே மாதம் நிறைவுற்றன. கி.பி. 1855ஆம் ஆண்டு இத்தாலி முழுவதும் காலரா பரவிய பொழுது, இப்பகுதியில் பாதிப்புகள் மிகக் குறைவாகவே இருந்தன. உடனே, அன்னைக்கு நன்றி செலுத்தவும், தங்களின் பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கும் வகையிலும், அப்பகுதி மக்கள், ஒரு பாவபரிகார பவனியை மேற்கொண்டனர்.

அன்னை தங்களுக்கு தொடர்ந்து அளித்துவரும் பராமரிப்பிற்கு நன்றி செலுத்துவிதமாக, அன்னையின் திருஉருவத்திற்கு தங்க கிரீடமானது அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட காலமாக வத்திக்கான் திருப்பீடத்திற்கு மக்கள் எழுப்பிக் கொண்டேயிருந்தனர். அக்கோரிக்கைக்கு வலுசேர்க்கும் விதமாக, பேரருட்திரு. ரபேயேலே பெத்தெல்லியும், ஆலயப் பொறுப்பு தந்தை அருட்பணி. லுயிஜி கபிரெல்லி அவர்களும் வத்திக்கான் திருப்பீடத்திற்கு மீண்டும் ஒரு கோரிக்கையை அனுப்பினர். அக்கோரிக்கையானது, கி.பி. 1879ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி ஏற்கப்பட்டது. பின், மே மாதம் 18ஆம் தேதி வத்திக்கான் பிரதிநிதி பேராயர் பிரான்செஸ்கோ பொலியாதி அன்னையின் திருஉருவத்திற்கு தங்க கிரீடம் அணிவித்து மரியாதை செலுத்தினார். இத்திருநிகழ்வில் பயென்சா நகர் ஆயரும் கலந்துகொண்டு மறையுரை ஆற்றினார். எட்டு நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் ஏற்குறைய பத்தாயிரம் மக்கள் பங்கெடுத்தனர்.

கி.பி. 1929ஆம் ஆண்டு அன்னையின் பக்தி முயற்சிகள் தொடங்கப்பட்ட இரண்டாம் நூற்றாண்டு விழாவானது, பேரருட்திரு ஜிசப்பே பபினி அவர்களின் முன்முயற்சியால், கர்தினால் மிக்கேலே லேகா தலைமையில் மே மாதம் 12ஆம் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் மிகப்பெரிய சேதங்களை இத்திருத்தலத்திற்கு உருவாக்கியது. கி.பி. 1944ஆம் ஆண்டு டிசம்பர் முதல் கி.பி. 1945ஆம் ஏப்ரல் வரை செனியோ நதிக்கரை பெரும்

போர் களமாக இருந்தது. அந்நாட்களில் அப்பகுதியில் பெருத்த உயிர் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டன. ஆலயமும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆலயத்திலிருந்து அன்னையின் திருஉருவம் பத்திரமாக மீட்கப்பட்டு அருகில் இருந்த மங்களவார்த்தை அன்னை ஆலயத்தில் வைக்கப்பட்டது. போருக்கு பின் ஆலயம் சீரமைக்கப்பட்டு அன்னையின் திருஉருவம் மீண்டும் அங்கு நிறுவப்பட்டது. கி.பி. 1963ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9ஆம் தேதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஆலயம் மீண்டும் முற்றிலுமாக சேதடைந்தது. கி.பி. 1970ஆம் ஆண்டு வரை ஆலயம் மூடப்பட்ட நிலையில், அன்னையின் திருஉருவமானது பங்கு ஆலயத்தில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்தது.

பல்வேறு முயற்சிகளுக்கு பிறகு, பல உபகாரிகளின் பேருதவியால் ஆலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு, கி.பி 1987ஆம் ஆண்டு ஆகஸ்டு 29ஆம் தேதி அர்ச்சிக்கப்பட்டது. அதே நாளில், அன்னையின் திருஉருவமானது பங்கு ஆலயத்திலிருந்து மீண்டும் கொணரப்பட்டு மீண்டும் திருத்தலத்தில் நிறுவப்பட்டது. இன்றளவும், பல்வேறு பகுதிகளிலிருந்து அன்னையின் பரிந்துரையை நாடி மக்கள் வந்த வண்ணம் இருக்கின்றனர். அன்னையிடமிருந்த தாங்கள் பெற்று கொண்ட பேருபகாரங்களுக்கு நன்றியாக பக்தர்கள் செலுத்திய காணிக்கை பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

புகழ்பெற்ற இத்தாலிய பாடகி லவுரா பவுசினி (Laura Pausini) தன் குழந்தை பருவம் முதல் வளர்ந்தது சொலாரோலோவில்தான். தன்னுடைய வாழ்வின் மறக்கமுடியாத இந்த ஊரில் தான் பெற்ற விருதுகளை கொண்ட காட்சியகம் ஒன்றையும் வைத்துள்ளார். அதற்கெல்லாம் மேலாக நலம் தரும் அன்னையிடம் அபரிமிதமான பக்தி கொண்டவராகவும் உள்ளார். எப்பொழுதெல்லாம் ஊருக்கு வருகிறாரோ அப்பொழுதெல்லாம் ஆலய வழிபாட்டில் பங்கெடுப்பதோடு, ஆலயப் பாடகர் குழுவிலும் பாடுகிறார் என்பதும் வியப்புக்குள்ளாக்குகிறது. தன் வேர்களை மறக்காத ஒருவர் இவர் என்பது உண்மையே.

அன்னையை நாடுவோம்! அருள் வளங்களை பெறுவோம்!!





# மாதா மன்றாட்டு மாலை

20



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## விசுவாசமாயிருக்கிற கன்னிகையே

### விசுவாசம் என்பது

விசுவாசம் என்பது கடவுளால் நமக்கெல்லாம் வழங்கப்பட்ட ஓர் அருங்கொடை. ஒப்பில்லா பரிசு ஆகும் எபி 11.6-ல் நம்பிக்கையில்லையன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க இயலாது. மரியா கடவுளின் செயல்பாடுகளை எல்லாம் புரிந்து கொண்டார் என்பதல்ல. மாறாக முழுமையாக விசுவசித்தார், நம்பினார் என்பதே அவருக்கு சிறப்பு விசுவாசம் என்பது கண்ணுக்குப் புலப்படக்கூடிய ஒன்றல்ல புலன்களுக்கு, அறிவுக்கு எல்லாம் அப்பாற்பட்டது. ஆனாலும் செயல்களால் ஒருவருடைய விசுவாசத்தை வெளிப்படுத்த முடியும். இதற்கு உதாரணமாய் நம் கண்முன்னே நிற்பவரே நம் அன்னை மரியா.

### விண்ணகப் புண்ணியம்

புண்ணியங்களை பொதுவாக மூன்றாக இறையியல் கண்ணோட்டத்தில் பிரித்துள்ளனர். விசுவாசம்(நம்பிக்கை), எதிர்நோக்கு, அன்பு (1கொரி 13.13) என்பதே அந்த மூன்று புண்ணியங்கள். இதில் மரியா தலை சிறந்ததாகக் கொண்டு செயல்படுத்திய புண்ணியம் விசுவாசம். ஏனெனில் இது ஏனைய புண்ணியங்களுக்கெல்லாம் அடிப்படை என்பதே மரியா வாழ்வு நமக்கு படம்பிடித்து காட்டுகிறது. யோவான் 20.39 காணாமலே விசுவசிப்போர் பேறுபெற்றோர். அன்னை மரியா வானதூதர் கபிரியேலிடமிருந்து பெற்றுக் கொண்ட இயேசுவின் பிறப்புச் செய்தியைப் பற்றி அவர் ஒன்றும் அறியார். அவருக்கு அறிவிக்கப்பட்ட செய்தியும் அவரின் புரிதலில் ஆழப்படவில்லை. இப்படி இருந்தும்கூட முழுமையாக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தோடு செயல்பட்டார். அவருடைய வாழ்வு எளிமையை பிரதிபலித்த போதும், விசுவாசத்தில் அவரைப் போல உயர்ந்தவர் யாரும் இல்லை. இதனால்தான் லூக் 1.48 –ல் எல்லாத் தலைமுறையினரும் அவரை பேறுடையாள் எனப் போற்றுகிறது. மரியா விசுவாசத்தினால் சொன்ன



# தூய மரிய தெரேசா (கத்தரீனா குவாரண்டா)



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

கத்தரீனா குவாரண்டா இத்தாலியின் லக்னாஸ்கோ (குனியோ) என்ற ஊரில் 1883 மார்ச் 8 ஆம் தேதி ஜியோவான்னி பட்டிஸ்டா மற்றும் மரியா மகதலேனா மெல்லானோ ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். ஒன்பது குழந்தைகளைக் கொண்ட இந்த விவசாயக் குடும்பம், அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கையை ஊட்டிய சூழலை உருவாக்கியது. இளமைக் காலத்திலேயே கத்தரீனாவுக்கு இறைவனிடம் முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என்ற தீவிர ஆசை ஏற்பட்டது. 1899 ஆம் ஆண்டில், அவர் சலேசியன் சகோதரிகளுடன் சேர்ந்தார். ஆனால் இளம் வயது மற்றும் திடீர் நோய் காரணமாக, அவர் குடும்பத்திற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. பின்னர் 1905 முதல் 1909 வரை பல மடங்களில் சேர முயன்றார், ஆனால் அவரது நோய்கள் அவரை அனுமதிக்கவில்லை. 1909 ஆம் ஆண்டில், அவர் தன் பங்குத்தந்தை உதவியுடன் மரியாவின் மகள்களின் புனித சங்கம் என்ற அமைப்பைத் தொடங்கினார். இறுதியாக, 1927 டிசம்பர் 31 அன்று, அவர் ரேஜியோ எமிலியா என்ற ஊரில் உள்ள நமது மரியின் ஊழியர் மடத்தில் சேர்ந்தார். 1928 மே 10 அன்று, அவர் தூய மரியா தெரேசா என்ற துறவறப் பெயரை ஏற்றுக்கொண்டார். 1931 முதல், அவர் படுக்கையில் கிடந்த நிலையிலேயே தன் வாழ்நாளைக் கழிக்க வேண்டியதாயிற்று. இருப்பினும், அவரது ஆன்மீக வலிமை மற்றும் புண்ணிய வாழ்வு பலரை ஈர்த்தது. 1932 மே 21 ஆம் தேதி நடைபெற்ற அவரது இறுதி வார்த்தைப்பாட்டில், ஒரு படுக்கையில் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டார். இந்த தனது நிலைமையை குறித்து அவர் என்றும் வருத்தம் தெரிவித்ததில்லை. 1954 ஜனவரி 23 அன்று அவர் இறந்தார். அவரது புனித வாழ்க்கையைப் பற்றிய விசாரணை 1967 இல் தொடங்கி, 1970 இல் முடிவடைந்தது. அவரை புனிதராக்கும் வேண்டுகோள் வத்திக்கானில் உள்ளது. தூய மரியா தெரேசாவின் வாழ்க்கை, துன்பங்களின் மூலமும் இறைவனிடம் முழுமையாக அர்ப்பணிப்பதன் மூலமும் மகிமைப்படுத்தப்படும் ஒரு வாழ்க்கையாகும். அவரது தொடர்ந்து போராடும் தன்மையும் மற்றும் நம்பிக்கை இன்றும் பலருக்கு ஊக்கமளிக்கிறது.



ஆகட்டும்







திருப்பயணம் தொடரும்...........

ஆகட்டும்

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## திருப்பாடல்கள் 1-20



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 1 |
| | 6 | | | | | | | 5 | |
| | | 10 | | | | | 9 | | |
| | | | | | | 12 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | 13 | | | | | | |
| | | 11 | | | | | | | |
| | 7 | | | | | | | 8 | |
| 3 | | | | | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

1) நேர்மையாளரின் நெறியை ………. கருத்தில் கொள்வார்: பொல்லாரின் வழியோ அழிவைத் தரும்.

4) பொல்லார் மனமாற்றம் ………….. அவர் தம் வாளைக் கூர்மையாக்குவார்: வில்லை நாணேற்றி ஆயத்தம் செய்வார்.

5) ஒடுக்கப்படுவோருக்கு ஆண்டவரே………….. நெருக்கடியான வேளைகளில் புகலிடம் அவரே.

8) ஆண்டவரை எப்போதும் என்………….. வைத்துள்ளேன்: அவர் என் வலப்பக்கம் உள்ளார் எனவே, நான் அசைவுறேன்.

9) மாசற்றவராய் நடப்போரே! ………… நேரியவற்றைச் செய்வர்: உளமார உண்மை பேசுபவர்:

12) ஆண்டவரைப் பற்றிய ……….. தூயது: அது எந்நாளும் நிலைத்திருக்கும். ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை: அவை முற்றிலும் நீதியானவை.

**இடமிருந்து வலம்**

2) விடுதலை ………….. ஆண்டவர்: அவர்தம் மக்களுக்கு ஆசி வழங்குவாராக!

3) ஆண்டவரே, திரும்பும்: என் ………. காப்பாற்றும், உமது பேரன்பை முன்னிட்டு என்னை மீட்டருளும்.

6) ஆண்டவரே, என் வழக்கின் நியாயத்தைக் கேட்டருளும்: என் வேண்டுதலை உற்றுக் கேளும்: வஞ்சகமற்ற உதட்டினின்று ……….. என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.





நினைவூட்டுகின்றார். கிறிஸ்துவின் சிலுவையே உண்மையான சீடரின் பெருமை சிலுவையோடு நமது வாழ்வு ஒன்றுபட வேண்டும். அதன் மூலம் தூய ஆவியில் புதுப்படைப்பாக புதிய மனிதர்களாகத் தன்னைப்போல இயேசுவின் அன்புக்கு அடிமையாக மாறி நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள புனித பவுல் விடுக்கும் அழைப்பிற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தாங்கள் பெற்ற அழைப்புக்கேற்ற வாழ்வு வாழ்ந்து தங்களது அழைப்பின் முழுமையை அடைய துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஞானத்தின் பிறப்பிடமே எம் இறைவா! எம் இளைஞர் இளம்பெண்கள் உமது அழைத்தலின் மேன்மையை உணர்ந்து குருவாக, துறவியாக தங்களது வாழ்வை தேர்ந்தெடுக்கக்கூடிய இறைஞானத்தையும், உமது அருளையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆறுதலின் ஊற்றே எம் இறைவா! நாங்கள் எங்களது துன்ப வேளையில் உமது அளவற்ற அன்பையும், உடனிருப்பையும் உணர்ந்து உமது வார்த்தையை வாசித்து அதன் வழியாக உமது ஆறுதலையும் அரவணைப்பையும் உணர்ந்து வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை வாழ்வாக்கி அதன் வழியாக உமது இறையரசை கட்டி எழுப்பத் தேவையான அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## நன்றி

**கடந்த மூன்று வருடங்களாக ஆகட்டும் இதழின் பதிப்பாசிரியராகிய எனக்கு ஊக்கமும் ஆதரவும் அளித்த எங்கள் மரியின் ஊழியர் சபை ஐக்கிய அன்னை மறைமாநில அதிபர் அருட்பணி. உவரி அந்தோணி அவர்களுக்கும் ஆகட்டும் இதழின் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆகட்டும் இதழை அச்சடித்து தரும் திரு. ரீகன் அவர்களுக்கும், அட்டைப்படம் வடிவமைத்து தரும் செல்வன் கௌரிஷ் அவர்களுக்கும் தபால் நிலையத்தில் உதவி செய்யும் திரு. தனராஜ் அவர்களுக்கும், ஆகட்டும் இதழுக்கு விளம்பரம் தரும் அருட்பணி. கில்பர்ட்ராஜ் மற்றும் அருட்பணி. ஆனந்த லூர்து ராஜ் அவர்களுக்கும் ஆகட்டும் இதழின் வாசகர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு கொடுத்த அதே ஆதரவினை ஆகட்டும் இதழின் புதிய பதிப்பாசிரியர் அருட்பணி ஆன்றணி ஷாஜி அவர்களுக்கும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

தேவையான இறைஞானத்தை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 14 ஆம் ஞாயிறு (06-07-2025)
## எசா 66:10-14; கலா 6:14-18; லூக் 10:1-12, 17-20

### திருப்பலி முன்னுரை

கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும் திருத்தூதர்களை அடிக்கல்லாகவும் விசுவாசிகளை கட்டிடக் கல்லாகவும் கொண்டு அமைந்ததுதான் நமது தாய் திருஅவை. ஆனால் இன்று உண்மையான போதுமான பணியாட்கள் இல்லாமல் கட்டிடம் ஆட்டம் கண்டுள்ள நிலை. ஒருபுறம் பிரிந்த சகோதரர்கள், மறுபுறம் அரசியல் அமைப்புகள் நமக்கு எதிராக செயல்படும் நிலை வேலையின்மை, பொருளாதாரத் தட்டுப்பாடு, வசதியின்மை, கல்வியறிவற்ற நிலை, ஒருபுறம் அறிவியல் வளர்ச்சி, மிதமிஞ்சிய அறிவு போன்றவை கடவுளையே கேள்விக்குறியாக்கும் நிலை மறுபுறம் இத்தகைய சூழ்நிலையில் திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும் இறைவனது பணியாளர்களாக அனுப்பப்பட்டவர்களே என்பதை இன்றைய இறைவார்த்தை நமக்கு நினைவூட்டுகின்றது.

உயிர்த்த ஆண்டவர் தாம் சந்தித்த ஒவ்வொருவரையும் அனுபவிப்பது போல அவரது வார்த்தையையும், அதை ஏந்திவரும் அவரது பணியாளர்களையும் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். அவரது வார்த்தையையும் அழைப்பையும் நிராகரித்தால் தண்டனை என்றும் ஆனால் கடவுளின் வார்த்தையை மேற்கொண்டு அவர் எங்கெல்லாம் அழைத்தாரோ அங்கெல்லாம் சென்று எதையெல்லாம் செய்ய பணித்தாரோ அதையெல்லாம் செய்தால் நமக்கு வானகத்தில் வெகுமதி உண்டு என்பதை இன்றைய இறைவார்த்தை உணர்த்துகிறது. எனவே இறைவார்த்தையை தினமும் வாசித்து தியானித்து இறைவிருப்பத்தை அறிந்து அவ்விருப்பத்தை செயல்படுத்துவதே இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

கடவுள் இஸ்ரயேல் மக்கள் மீது தனிப்பட்ட அன்பையும் அக்கறையையும் கொண்டுள்ளார் என்பதை எசாயா வாயிலாக ஆண்டவர் வெளிப்படுத்துவதை இன்றைய வாசகம் விவரிக்கின்றது. கடவுளின் அன்பு தாய் அன்பைப் போன்றது என்றும் அந்த அன்பில் நிலைத்து இன்புற எசாயா இறைவாக்கினர் அழைப்புவிடுக்கின்றார். ஆண்டவரது வார்த்தைக்கு செவிகொடுத்து அவரது அன்புக்கும் அவரது பணிக்கும் நம்பிக்கையோடு இருக்கும்போது நமது பகைவர்கள் அனைவரையும் முறியடித்து அடிமைத்தளத்திலிருந்து மீட்பார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

பணம் பதவி பகட்டு போன்ற உலக ஆடம்பர வலையில் சிக்கி கிறிஸ்தவ அடிப்படையை மறந்திருந்த கலாத்திய மக்களுக்கு கிறிஸ்துவின் சிலுவைமீது கொள்ளும் நம்பிக்கையே அடிப்படை. மற்ற வெளி ஆடம்பரங்கள் அவசியமில்லை என்பதை புனித பவுல் அடியார்





7) ஆண்டவரே, எத்தனை நாள் என்னை மறந்திருப்பீர்? இறுதிவரை மறந்துவிடுவீரோ? இன்னும்
…………நாள் உமது முகத்தை எனக்கு மறைப்பீர்?
10) ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன்: …….. என் வலப்பக்கம் உள்ளார் எனவே, நான் அசைவுறேன்.
11) ஆண்டவரே, …… வெற்றியருளும்: நாங்கள் கூப்பிடும் வேளையில் எங்களுக்குப் பதிலளியும்.
13) ஆண்டவரே, ………… வாரும்: அவர்களை நேருக்குநேர் எதிர்த்து முறியடையும்: பொல்லாரிடமிருந்து உமது வாளால் என்னைக் காத்தருளும்.

**மேலிருந்து கீழ்**

1) ஆண்டவருக்கும் அவர்தம் அருள் பொழிவு பெற்றவர்க்கும் எதிராகப் பூவுலகின் அரசர்கள் அணிவகுத்து நிற்கின்றார்கள். ………… ஒன்றுகூடிச் சதிசெய்கின்றார்கள்:
2) தானியமும் திராட்சையும் நன்கு விளையும் காலத்தில் ………. மகிழ்ச்சியைவிட மேலான மகிழ்ச்சியை நீர் என் உள்ளத்திற்கு அளித்தீர்.
5) பொல்லார் தம் இறுமாப்பினால் எளியோரைக் கொடுமைப்படுத்துகின்றீர்?………….. வகுத்த சதித்திட்டங்களில் அவர்களே அகப்பட்டுக்கொள்வார்களாக:
6) நான் ஆண்டவரிடம் அடைக்கலம் புகந்துள்ளேன்: நீங்கள்……… பறவையைப் போல மலைக்குப் பறந்தோடிப் போ:
9) அவர்கள் ஈவு ……… அற்ற கல் நெஞ்சர்கள்: தங்கள் வாயினால் இறுமாப்புடன் பேசுவார்கள்.
10) சாவின் கயிறுகள் என்னை இறுக்கின: ……….. சுழல்கள் என்னை மூழ்கடித்தன.
12) அப்பொழுது, மண்ணுலகம் ……….. அதிர்ந்தது: மலைகளின் அடித்தளங்கள் கிடுகிடுத்தன:அவர்தம் கடுஞ்சினத்தால் அவை நடுநடுங்கின.

**கீழ்ருந்து மேல்**

3) என் அரசரே, என் கடவுளே, என் கெஞ்சும் குரலை …….. ஏனெனில். நான் உம்மை நோக்கியே மன்றாடுகிறேன்.
4) வானத்துப் பறவைகள், கடல் மீன்கள், ஆழ்கடலில் நீந்திச்செல்லும் உயிரினங்கள்………. அவர்களுக்குக் கீழ்படுத்தியுள்ளீர்.
7) ஆண்டவரே, நீர் எம்மைக் காத்தருளும்: இத்தகைய தலைமுறையிடமிருந்து எம்மை ……… காப்பாற்றும்.
8) ………… இல்லை என அறிவிலிகள் தம் உள்ளத்தில் சொல்லிக் கொள்கின்றனர்:
11) அது வானத்தின் ஒரு முனையிலிருந்து புறப்படுகின்றது: …….. பாதை மறுமுனை வரையிலும் செல்கின்றது: அதன் வெப்பத்திற்கு மறைவானது ஒன்றுமில்லை.
13) ஆண்டவரே, நீர் எம்மைக் காத்தருளும்: இத்தகைய தலைமுறையிடமிருந்து எம்மை ……… காப்பாற்றும்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-06-2025

# ஏவா, மரியா ஒப்பீடு 25

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



**ஏவா**

உலகின் முதல் பெண்மை இவர்
உருவிலார் செய்த பொம்மை இவர்
திரையில்லார் உருவ தோற்றம் இவர் - மாசு
மருவில்லா உயிரின் மாற்றம் இவர்
சாபத்தை நுழைத்த பெண்மை இவர் - கடவுளின்
கோபத்தை அழைத்த பெண்மை இவர்
சாவினை கொணர்ந்த பெண்மை இவர் - அருள்
வாழ்வினை இழந்த பெண்மை இவர்
அலகைக்கு அடிமை சாசனம் இவர்
அவனிக்கு அலகை பாசனம் இவர்
துன்பங்கள் அனைத்தின் தொடக்கம் இவர்
இன்பங்கள் அனைத்தின் முடக்கம் இவர்
இறையவன் வார்த்தையை துறந்தவர் இவர்
துகசுகத் தோட்டத்தை பிரிந்தவர் இவர்
இறைமகன் பிறக்க காரணர் இவர்
சிலுவையில் மரிக்கவும் காரணர் இவர்

**மரியா**

கடவுளே தேர்ந்த பெண்மை இவர்
கடவுளுக்காய் நேர்ந்த பெண்மை இவர் - பரி
சுத்தமாய் பிறந்த பெண்மை இவர்
சத்தியம் காத்த பெண்மை இவர்
அருள் நிறைந்த பெண்மை இவர் - பாவ
இருள் துறந்த பெண்மை இவர்
இறைவனை சுமந்த பெண்மை இவர்
இகமதில் சிறந்த பெண்மை இவர்
ஆண்டவர் அடிமை ஆனவர் இவர்
அண்டத்தின் அருமை சாட்சியம் இவர்
அலகையின் தலையை மிதித்தவர் இவர்
அவனிக்கே தாயாய் மிளிர்பவர் இவர்
இறைவனை உலகிற்கு அளித்தவர் இவர்
இறையன்பை இதயத்தில் பதித்தவர் இவர்
மீட்பு வழங்கிட காரணர் இவர்
மீட்பர் உயிர்ப்புக்கு பூரணம் இவர்





நம்ப வேண்டும். அவரை மேலோட்டமாக அல்ல மாறாக வேரோட்டமாக பின்பற்ற வேண்டும். அதற்கு தூய ஆவியாரின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழ வேண்டும். எனவே தூய ஆவியாரின் பிரசன்னம் எப்போதும் நமது வாழ்வில் செயல்பட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

எலிசாவின்மீது தன் போர்வையை போட்டு எலியா அவரை அழைத்தபோது அவருக்கு முன் இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று தன்னுடைய பழைய விவசாய வாழ்விலே நிலைத்திருப்பது அல்லது அனைத்தையும் இழந்துவிட்டு இறைவனுக்கு பணியாற்ற எலியாவைப் பின்பற்றுவது. இந்த இரண்டு வழிகளில் முந்தைய சாவின் வழியை விட்டுவிட்டு இரண்டாவது வழியான வாழ்வின் வழியை எலிசா பற்றிக்கொண்டார். நாமும் எலியாவைப் போல எல்லாவற்றையும் துறந்து இயேசுவை பின்பற்ற வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

ஊனியல்பின் வழி தொடக்கத்தில் மகிழ்ச்சியானதாகவும், உற்சாகம் தரக்கூடியதாகவும் தோன்றினாலும், அதன் முடிவு அழிவு. சாவின் வழியாகிய ஊனியல்புக்கு அடிமையாகின்ற வேளையில் இறைவன் நமக்கு கொடுத்த தூய ஆவியின் கொடைகள், கனிகள் முதலியவற்றை ஒவ்வொன்றாக இழக்க ஆரம்பிக்கின்றோம். இதற்கு மாறாக தூய ஆவியார் தரும் வாழ்வின் வழியை நாம் தேர்ந்தெடுக்கின்ற வேளையில் இயேசுவின் அழைப்புக்கு செவிமடுத்து வாழ்வின் மக்களாக வாழ்வோம் என்று உரைக்கும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. திருஅவையை வழிநடத்தும் எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது அழைப்பிற்கு திறந்த மனதுடன் செயல்படவும், உமது சீடத்துவத்தில் முழுமையாக பங்குபெற்று உமது அன்பில் வாழவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. நல்ல ஆயனே எம் இறைவா! எங்களது அனுதின வாழ்வில் ஊனியல்புக்குரிய வழிகளை விடுத்து ஆவிக்குரியவற்றில் நிலைத்து நின்று வாழ்வுக்குரிய மக்களாக உமது அன்பின் மக்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. எங்கள் அரணும் மீட்பருமாய் வீற்றிருக்கும் எம் இறைவா! நாங்கள் ஒவ்வொருவரும் நீர் மட்டுமே எங்களது முழுபாதுகாப்பு என்பதை உணர்ந்து உம்மிலே தஞ்சம் கொண்டு வாழவும், அதன் வழியாக எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் எங்களது கிறிஸ்தவ வாழ்வை தொடர்ந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. இறையழைத்தலின் ஊற்றே எம் இறைவா! இன்றைய இளைய சமூகம் கிறிஸ்துவின் உன்னதமான அழைப்பின் மேன்மையை உணர்ந்து ஊனியல்புக்கு அடிமைகளாக மாறாமல் ஆவியின் தூண்டுதலால் உமது திட்டத்தை அறிந்து இறைப்பணிக்காக தங்களை அர்ப்பணித்து வாழ்ந்திட

மரணத்தையும் உயிர்ப்பையும் எடுத்துரைக்க வேண்டும் என்று புனித பவுல் கூறுகிறார். நாமும் ஒவ்வொரு நாளும் நற்கருணை விருந்தில் பங்குபெற்று இறையருளும் இறை பிரசன்னத்தையும் நிறைவாக பெற்று இயேசுவின் மறுவருகை வரை அவரது பாடுகளுக்கும் இறப்புக்கும் உயிர்ப்புக்கும் சாட்சியாக வாழ வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் அனுதினமும் நற்கருணை பெற்று ஆன்மீகத்திலும் விசுவாசத்திலும் வலிமை நிறைந்த கிறிஸ்தவர்களாக வாழத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

2. நற்கருணையின் நாயகனே எம் இறைவா! நற்கருணையில் நீர் உண்மையாகவே பிரசன்னமாய் இருக்கிறீர் என்று நாங்கள் முழுமையாக உணர்ந்து உம்மை உட்கொண்டு நாங்கள் மென்மேலும் நம்பிக்கையில் நாளும் வளர அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நற்கருணையில் வீற்றிருக்கும் எம் இறைவா! நற்கருணை பலியை ஒப்புக்கொடுக்கும் குருக்களும் அதில் பங்கேற்கும் எல்லா நம்பிக்கையாளர்களும் தங்கள் வாழ்வையே பலியாக்கவும், தம்மையே பிறருக்குப் பிட்டுக் கொடுக்கவும் தமது இரத்தத்தை விசுவாச சாட்சிய வாழ்விற்காக சிந்தவும் முன்வர தேவையான தைரியத்தையும், வலிமையையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நம்பிக்கையின் ஊற்றே எம் இறைவா! நற்கருணையல் பங்குபெறுகின்ற நாங்கள் இறைவிசுவாசத்தில் நாளுக்கு நாள் வளரவும் மேலும் ஏழை எளியவர்களுக்கு எங்களிடம் இருப்பவற்றை பகிர்ந்துகொண்டு வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 13 ஆம் ஞாயிறு (29-06-2025)
## 1 அர 19:16,19-21; கலா 5:1,13-18; லூக் 9:51-62

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! இறைவாக்கினர் எலிசா மற்றும் இயேசுவின் முன்மாதிரிகையைப் பின்பற்றி சாவுக்குப் பதிலாக வாழ்வையும், தீமைக்கு எதிராக நன்மையையும் தேர்ந்தெடுக்க இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

முதல் வாசகம் எலிசாவின் அழைப்பைப் பற்றியும் நற்செய்தி வாசகம் இயேசுவைப் பின்பற்ற விரும்பிய மூன்று மனிதர்களின் அழைப்பைப் பற்றியும், இரண்டாம் வாசகம் நாம் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் பேசுகின்றன. ஒருவர் கிறிஸ்துவின் சீடராக மாற வேண்டுமென்றால் அவர் தமக்குள்ள எல்லாவற்றையும் துறக்க வேண்டும். இயேசுவைப் போலவே கடவுளிடம் மட்டுமே தங்களது முழு பாதுகாப்பைத் தேட வேண்டும். அவர்களின் வாழ்வையும் நிர்ணயிப்பது ஆண்டவர்தாமே என்று





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

## மூவொரு கடவுளின் பெருவிழா (15-06-2025)
## நீமொ 8:22-31; உரோ 5:1-5; யோவா 16:12-15

### திருப்பலி முன்னுரை

கத்தோலிக்கத் திருஅவையில் நாம் விசுவசிக்கின்ற மறைபொருட்களுள் மிகவும் முக்கியமானதும், புரிந்துகொள்ள சற்று கடினமானதாகவும் இருப்பது மூவொரு கடவுள் மறையுண்மை. எளிதில் புரிந்துகொள்ளப்பட முடியாத மறையுண்மையாக இருந்தாலும் இந்த வெளிப்படுத்தப்பட்ட விசுவாச மறையுண்மையை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். நாம் நமது அனுதின செபங்களை துவங்கும்போதும், முடிக்கும்போதும், சிலுவை அடையாளம் வரைகின்றபோதும், தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே என்று சொல்லி இந்த மறையுண்மையைத்தான் ஒவ்வொரு நாளும் நினைவுகூறுகிறோம்.

கடவுள் மனித கட்டுப்பாடுகளைத் தாண்டியவர், எல்லைகளற்றவர், வளமையானவர். எனவே இறைவன் நம்முடைய சிந்தனைத் திறத்தினாலோ, அறிவின் ஆற்றலினாலோ முழுமையாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்யும்போது குழப்பமும், விதண்டாவாதமும் மிஞ்சும். இதற்கு மாறாக இறைவனை அனுபவப்பூர்வமாக அணுக அழைக்கப்படுகிறோம். இறைவனை ஓர் அனுபவ ஆற்றலாக நம்மை ஆட்கொண்டு வழிநடத்தும் தெய்வமாக அணுகினோம் என்றால் அவரை அறிந்துகொள்வதிலும், புரிந்துகொள்வதிலும் எந்தக் குழப்பமும் இருக்கப் போவதில்லை. கடவுளைப் பற்றி நூற்றுக்கணக்கான புத்தகங்கள் வாசித்து அவரைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதைவிட, அவரை ஒரு சில நிமிடங்கள் திருப்பலியின் அனுபவப்பூர்வமாக உணரும் போது நாம் கடவுள் என்கின்ற உண்மையை அறிந்துகொள்கிறோம். எனவே, கடவுள் விவாதிக்கப்பட வேண்டியவர் அல்ல மாறாக வாழ்ந்து காட்டப்பட வேண்டியவர். அலசிப் பார்க்கப்பட வேண்டியவரல்லர் அனுபவிக்கப்பட வேண்டியவர் என்பதை உணர்ந்து இறையனுபவம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகம் ஞானத்தை ஓர் ஆளாக உருவகப்படுத்துகிறது. கிறிஸ்தவ கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார். ஞானம் இருவகைப்படும். ஒன்று பசு ஞானம், மற்றொன்று பதி ஞானம். பசு ஞானம் மண்ணைச் சார்ந்தது, பதிஞானம் விண்ணைச்

சார்ந்தது. கடவுள் தரும் விண்ணக ஞானம் இம்மண்ணக நலன்களை வெறுக்கச் சொல்லவில்லை, மாறாக இம்மண்ணக நலன்களை விண்ணக நலன்களோடு தொடர்புபடுத்துகிறது. உலகம் இருப்பது நமக்காக நாம் இருப்பது கிறிஸ்துவுக்காக கிறிஸ்து இருப்பது கடவுளுக்காக. இப்படி மூன்று நிலையைக் காண்பதுதான் உண்மையான ஞானம் அத்தகைய இறைஞானம் வேண்டி இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட உயிருள்ள விசுவாசமே நம்மை இறைவனுக்கு ஏற்புடையவர்களாக மாற்றுகிறது. அவ்விசுவாசத்தால் இறைவன் தரும் மீட்பைப் பெறுகிறோம். இம்மீட்பே மூவொரு இறைவன் கொண்டுள்ள பங்கை இன்றைய இரண்டாம் வாசகம் தெளிவுபடுத்துகிறது. நம் மீட்பிற்காக கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பினார். மனிதனாக பிறந்த இயேசு தம் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு வழியாகக் கடவுளுக்கும் நமக்கும் நல்லுறவை ஏற்படுத்தினார். இந்த அருள் உறவிலே நாம் நிலைத்து நிற்கத் தேவையான மனவுறுதியையும் நம்பிக்கையையும் அளிப்பவர். தூய ஆவியே ஆவார். இவ்வாறு மீட்புத் திட்டத்தில் மூவொரு இறைவனின் செயல்பாடுகளை வெளிப்படுத்தும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. மூவொரு இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரும் தங்களது அழைத்தல் வாழ்வில் இறையனுபவம் பெற்று மூவொரு இறைவனாகிய உமக்கு என்றும் உண்மையான சாட்சிகளாக வாழத் தேவையான அருளை அனைவருக்கும் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. மூவொரு இறைவா! தூய ஆவியாரின் கொடைகளுள் ஒன்றான இறைஞானத்தை நாங்கள் அனைவரும் பெற்று இம்மண்ணக நலன்ளை விண்ணக நலன்களோடு தொடர்புபடுத்தி கிறிஸ்துவுக்காக வாழவும் அவரது படிப்பினைகளை செயல்படுத்தவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. மூவொரு இறைவா! இறைவனாகிய உம்மை எங்களது அறிவால் அனுகப்பட வேண்டிய ஒரு விசுவாசப் பொருள் அல்ல மாறாக உணர்வுபூர்வமாக அனுபவிக்கப்பட வேண்டிய ஒரு மறைபொருள் என்பதை உணர்ந்து ஒவ்வொரு நாளும் திருப்பலியில் உம்மை அனுபவிக்கத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. மூவொரு இறைவா! நாங்கள் அனைவரும் தந்தையின் அன்பையும், இயேசுவின் அருளையும், தூய ஆவியாரின் நடபுறவையும் பெற்று மகிழ்வோடும், ஒற்றுமையோடும், நம்பிக்கையோடும் வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இயேசுவின் திருஉடல் திருஇரத்தம் பெருவிழா (22-06-2025)

## தொநூ 14:16-20; 1கொரி 11:23-25; லூக் 9:11-17





### திருப்பலி முன்னுரை

உலக முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன் என்று கூறிய இயேசு அவரது உயிருள்ள பிரசன்னத்தை உணர்ந்து அவரோடு பயணிக்க நற்கருணை என்கின்ற அருள்அடையாளத்தை ஏற்படுத்தினார். நமது மீட்பிற்காகவும், வாழ்விற்காகவும் தம்முடைய உடலையும் இரத்தத்தையும் தந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை நமக்கு மீண்டும் உணர்த்த திருஅவையானது இயேசுவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழாவை நமக்குக் கொடுத்துள்ளது.

இன்றைய விழா இரண்டு நோக்கங்களுக்காக கொண்டாடப்படுகின்றது. முதலாவது தன்னையே நமக்கு வழங்கிய இறைவனின் அளவற்ற அன்புக்கு நன்றி சொல்வது. இரண்டாவது நமது தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் இயேசுவின் திருவுடல் மற்றும் திருஇரத்தம் எவ்வளவு அவசியமானது என்பதை உணர்ந்துகொள்வது. உடல் உயிர்வாழ உணவும், உடல் கழுவப்பட நீரும் அவசியமானதுபோல, நமது ஆன்மா வாழ்வு பெற இயேசுவின் உடலும், பாவங்களிலிருந்து கழுவப்பெற அவரது இரத்தமும் அவசியமாக இருக்கின்றன. உடல் நலம் இழந்தவர் நல்ல சத்துள்ள உணவை உண்ணும்போது வலிமை பெற்றவராக மாறுவதுபோல நாம் உண்ணும் நற்கருணையானது நமது ஆன்மீக வாழ்வின் குறைகளையும் தீமைகளையும் நீக்கி நமக்கு வாழ்வு தரவல்லதாக இருக்கிறது. சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் நம்மிலிருந்து அனைத்துப் பாவங்களையும் நீக்குவது மட்டுமல்லாமல் அழிவிலிருந்து நம்மைக் காக்க வல்லதாகவும் இருக்கிறது. எனவே அவரது திருவுடலை உண்ணும் போதெல்லாம் நாம் திடம் அடைகின்றோம். அவரது திருஇரத்தத்தைப் பருகும் போதெல்லாம் பாவங்களிலிருந்து கழுவப்படுகின்றோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

ஆபிரகாம் தாம் போரில் பெற்ற வெற்றியோடு பிணைப்பொருட்களையும் எடுத்துக்கொண்டு சலோம் என்று அழைக்கப்பட்ட இன்றைய எருசலேம் வழியாகச் செல்கையில் அந்நகரத்து அரசராகவும் குருவாகவும் இருந்த மெல்கிசதேக் ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொடுத்து ஆபிரகாமையும் அவரோடு வந்தவர்களையும் ஆசீர்வதித்தார். அதற்கு நன்றியாக ஆபிரகாம் தாம் கொண்டுவந்த பிணைப்பொருட்களில் பத்தில் ஒரு பகுதியை அவருக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறார். மெல்கிசதேக் கொடுத்த அப்ப இரச காணிக்கை பின்னர் எல்லா மனிதருக்கும் ஒப்புக்கொடுத்த புதிய உடன்படிக்கையின் காணிக்கைக்கு முன்அடையாளமாக அமைந்தது என்பதை மனதில் கொண்டு இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

நற்கருணைக் கொண்டாட்டம் திருஅவை கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட தொண்மையான மரபு. கிறிஸ்து கொடுத்த கட்டளை. ஆண்டவரின் இரண்டாம் வருகை வரை இக்கொண்டாட்டத்தில் இயேசுவின்